
துளிர்



# ஓயும் உயரம்









## சேவை நலன் பாராட்டு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

எந்தையே உம் ஊழியர்
எழுப்பிய கூடம்
உந்தயையாலே பாலர்
உற்றார் ஆசி கிரீடம்
பந்த சித்தியாம் கிருபை
பாதை தன்னில் காணும்
இந்த நேரம் அன்னாரோ
டேத்துவோமும் நாமம்

ஓய்வு அற்று மாறியே
ஓடும் மோன ஆண்டு
தேய்வற்ற புது முக
தோழர் தந்த தீண்டு
மாய்வு தோன்றமறந்தார்
மன்னுந் திடம் பயம்
ஓய்ந்தாலும் மாறா உம்மோ
டொன்றாகிச் சிறந்தார்

நற்றானி யத்தை மன்னோர்
நட்டார் நாம் அறுக்க
பெற்றுப் பின்னோர் விளைவை
பண்ட(க)சாலை சேர்ப்பார்
அற்றை நாள் தரும் பாடம்
உத்தம சேவையாம்
முற்றாய் உயர்ச்சிக்கே எம்
முழு நோக் கன்றாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MOTTO

Utmost for the Highest

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி

## VISION

Quality Education, the key to Success
of Future Generation

தரமான கல்வி எதிர்கால சந்ததியின்
வெற்றிக்கான திறவுகோல்

## MISSION

"Pave the way towards inculcation innovation
Skills and enhancing Social Economic
Development among Students, to become
Useful and Patriotic Citizens in keeping with
National Education Policy"

"எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்
கூடியவாறு சமூக பொருளாதார அபிவிருத்தியை
மேம்படுத்துவதற்கு மாணவர்களைத் தேசிய
கல்விக் கொள்கைக்கு ஏற்ப நாட்டுப்பற்றுள்ள
புத்தாக்க திறன்மிக்க, பயன்மிக்க
பிரஜைகளாக திகழ வழிசெய்து கொடுத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உவெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபரும், கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் சேகர உக்கிராணக்காரருமான திரு. வடிவேல் பிரபாகரன் அதிபரைக் குறித்து எழுதக்கிடைத்த தருணத்திற்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

நான் மெதடிஸ்த திருச்சபை கல்முனை சேகரத்திற்கு குருவானவராக வருவதற்கு முதலே திரு. வ. பிரபாகரன் அதிபரை எனக்கு தெரியும். இவர் எமது இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முக்கிய பொறுப்பாக உள்ள உப தலைவர் என்ற பொறுப்பை கடந்த காலங்களிலே ஏற்று இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவராக ஒரு வருடம் பணியாற்றியுள்ளார். இவர் அனைத்து மக்களுடனும் நல்லுறவை வளர்ப்பதிலும் சிநேகத்துவத்தை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கினார்.

எமது கல்முனை மெதடிஸ்த திருச்சபையில் திரு. வ. பிரபாகரன் சேர் சிறந்த வழிகாட்டியாகவும், கடவுளுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் சிறந்த பிரசங்கியாளராகவும், ஒரு உண்மைத்துவம் நிறைந்த நேர்மையுள்ள ஒரு சிறந்த உக்கிராணக்காரராகவும் பணியாற்றுகின்றார் என்று சொல்வதில் கல்முனை மெதடிஸ்த திருச்சபை மகிழ்ச்சியடைகின்றது. இவர் திருச்சபையின் அனைத்து மக்களையும் உள்ளவாங்கவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவராகவும் விளங்கினார். அதாவது கடவுளின் பணியில் சகலரையும் உள்வாங்கி பணியாற்றவேண்டும் என்பதிலே அதிக அக்கறை கொண்டவர்.

யார் ஒருவர் தன்னால் இயலாது என்று தன் மனதில் நினைக்கின்றாரோ அவரை முன்கொண்டு வருவதில் ஆர்வம் காட்டிய ஒருவர். திருச்சபையில் குறிப்பாக சிறுவர்கள் முதியவர்களை இவர் அவரது மனதிலே அதிகம் உள்வாங்கியவராக பணிகளில் பயன்படுத்துவதில் சிறந்து விளங்கினார்.

திருச்சபை வாழ்வில் அனைவரையும் சமமாக கருதவேண்டும் என்ற மனநிலை கொண்டவர். எமது சபைக்கூட்டங்களில் சேர் அதிகம் பேசமாட்டார். ஆனால் அவர் கூட்டங்களில் பேசினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பெறுமதியுள்ள கருத்தாகவும், ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகவும் காணப்படும். மற்றும் பாடசாலையில் இவரது சேவையை குறித்துப் பார்க்கும்போது இவரது அதிபர் சேவை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் போற்றப்பட வேண்டிய சேவையாக காணப்படுகின்றது. ஆசிரியருடனும், மாணவருடனும் அன்போடு கூடிய கண்டிப்பை இவரது நிர்வாகத்தில் நான் கண்டுள்ளேன். திரு.வ. பிரபாகரன் சேர் அவர்கள் பிள்ளைகளின் நிலைகளை பாடசாலை மட்டத்தில்மட்டும் பார்க்காது குடும்ப சூழல்களையும், அவர்களது பின்னணிகளையும் நன்கு அறிந்தவர் இது அவரது சிறப்புப் பண்பாக நான் காண்கிறேன்.

இதே வண்ணமாக ஆசிரியர்களின் நிலைகளையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற விதமாக சேவையாற்றக் கூடியவர். திரு. வ. பிரபாகரன் சேர் அவர்களை அதிபராக கண்ட நாட்களில் பாடசாலையில் அதிக நேரத்தை கொடுத்து பாடசாலை அபிவிருத்திக்கு அக்கறை காட்டிய ஒருவராகக் காண்கிறேன்.

இவரது குடும்பத்திலே தனது மகனை வைத்தியராக உருவாக்கியது சமூகத்திற்கு செய்த தொண்டாகக் கருதுகிறேன்.

எனவே திரு. வ. பிரபாகரன் சேர் அவர்கள் உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கும், கல்முனை மெதடிஸ்த திருச்சபைக்கும், இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கும் கொடையாக கருதி இறைவன் இவர் குடும்பத்தை ஆசீர்வதிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**அருட்.திரு. S.D. வினோத்**
கல்முனை சேகர, முகாமைக்குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதார வாழ்த்துகிறேன்

கல்முனையின் அறிவொளி பரப்பிவரும் உவெஸ்லி உயர்தர பாடசாலையின் ஆசிரியராகவும், அதிபரகவும் கடமையாற்றி 2009ம் ஆம் ஆண்டு தொடக்கம் அதிபராக பணிபுரிந்த திரு. வடிவேல் பிரபாகரன் அவர்கள் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லுகின்ற இவ் வேளையில் எமது "துளிர்" கழகத்தோடு இணைந்து செயற்பட்ட பெரும் சேவைக்காய் வாழ்த்துகின்றேன்.

இலங்கை கல்வி நிருவாக சேவையாளராக இவர் சிறந்த நிருவாகியாகவும், புதுமை புனைபவராகவும், யாதார்த்தவாதியாகவும் எம்மிடையே உலாவிக் கொண்டிருந்தவர். அவர் இருக்குமிடம் கலகலப்பானதாவே இருக்கும். இவ்வாறான சிறந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்ட இவர் எங்களது கழகத்தின் செயற்பாடுகளிலும், வளர்ச்சியிலும் உற்ற துணையாக இருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் வழிகாட்டி ஊக்குவித்தவர். விசேடமாக சுனாமி அனர்த்தத்தின் பின்னரான காலப் பகுதியில் எமது பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அமைத்திருந்த அகதிமுகாம் குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் அகற்றப்பட்டபோது அம் மைதானத்தை நாம் துப்பரவு செய்தபோது அப்போதைய அதிபர் பொ. முருகையா அவர்களின் வழிகாட்டலில் பிரபாகரன் ஐயா அவர்கள் கழக உறுப்பினர்களோடு இணைந்து செயற்பட்டமையை எம்மால் மறக்கமுடியாது. அது மட்டுமன்றி எமது கழகம் சார்பாக முன்வைக்கப்படும் வேண்டுகோளைப் பரிசீலித்து சிறப்பான முடிவுகளைக் கூறுவதில் வல்லவராகவும், வழிகாட்டியாகவும் அவரைக் கண்டோம்.

இவ்வாறு காத்திரமான பல்வேறு பணியாற்றிய இவர் தற்போது அரச சட்டத்திட்டங்களுக்கு அமைய தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றார். சிறந்த திட்டமிடலாளரான அவரிடம் தனது எதிர்காலத்திற்கான திட்டமிடல்கள் கைவசம் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மதிப்புக்குரிய திரு. வ. பிரபாகரன் ஐயா அவர்களே உங்களது ஓய்வுக்குப் பின்னரான காலத்தில் நீங்கள் எங்களோடு இணைந்திருப்பதையே நாங்கள் விரும்புகின்றோம். அத்துடன் உங்களது எதிர்கால வாழ்க்கையை நீங்கள் திட்டமிட்டவாறு வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

-நன்றி-

V. **திரு. செ. கலையரசன்**

(துளிர் கழகம் சார்பாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் நீண்ட வரலாற்றில் இன்னுமொரு புகழ்மிக்க ஆளுமை

முப்பத்து மூன்று வருட அரச சேவையின் பின்னர் ஓய்வு பெறும் திரு. வ. பிரபாகரன் சேர் அவர்களை கௌரவித்து கல்முனை "துளிர்" கழகம் வெளியிடவுள்ள பாராட்டு மலரில் கல்முனை (வடக்கு) பிரதேச செயலாளர் என்ற வகையில் நானும் அவருக்காக வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதையிட்டு பெரு மகிழ்சிடைகின்றேன். பிரபாகரன் சேர் எங்கள் திருக்கோயில் பிரதேசத்தினைச் சேர்ந்தவர். ஒரு வகையில் எனது உறவினரும் கூட அமரத்துவமடைந்த எனது தந்தையாரான திரு. தியாகராஜா அவர்களுடன் ஒரு காலத்தில் இவருக்கு நெருங்கிய நட்பு இருந்தது. அது அவர் இளைஞனாகவும் நான் முற்றத்தில் விளையாடும் சிறுவனாகவும் இருந்த காலம் அப்போது அவர் எமது பகுதியில் "கரன் சேர்" என்றே சுருக்கமாக அழைக்கப்பட்டு வந்தார். நெட்டை உருவமும் மெலிந்த தோற்றமுமாக அப்போது அவர் இருந்தார். அடிக்கடி அவர் எங்கள் வீட்டுக்கு எனது தந்தையாரை காண வருவார் அந்த நாட்களில் எனது தந்தையாருடன் இணைந்து ஓர் இரு நாடகங்களை நடித்து மேடை ஏற்றியதாக நினைவு.

பிரபாகரன் சேர் தனது 33 ஆண்டு கால கல்விச் சேவையில் 7 வருடங்கள் ஆசிரியராகவும் 16 வருடங்கள் பிரதி அதிபராகவும், 10 வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றி உள்ளார். இதனால் இக் கல்முனை பிரதேசம் இவரது சேவையை நன்றியுடன் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றது என நினைக்கின்றேன். இதுவே கல்முனை துளிர் கழகம் இவருக்கு பாராட்டு மலர் ஒன்றை வெளியிடுவதன் அடிப்படையாக இருக்கலாம்.

நான் அறிந்த வகையில் பிரபாகரன் சேர் இப்பிரதேசத்தில் அனைவராலும் நன்கு அறியப்பட்ட தவிர்க்கமுடியாத ஒரு புகழ்மிக்க ஆளுமையாக மதிக்கப்பட்டு வருகின்றார். எளிமையான பண்புகளைக் கொண்ட ஒருவராக இவர் இருந்தபோதிலும் கல்முனை பிரபலங்களில் ஒருவராக இவரை நான் காண்கிறேன். இப் பாடசாலையில் அதிபராக இருந்த காலத்தில் இப்பாடசாலையை மேலும் ஒரு படிக்கு உயர்த்திய பெருமைக்குரியவராக இவரைக் குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வியியலாளர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள் என அனைவரிடத்திலும் சுகமான அணுகுமுறையைக் கொண்டிருந்ததன் மூலம் இப்பாடசாலை எதிர் கொண்ட சவால்களை வெற்றிக் கொண்டு அனைவரின் மனதிலும் நீங்காத இடம் பிடித்துள்ளார் என்று கருதலாம். இவர் உயிரியல், தாவரவியல் பாடங்களை மாணவர்களுக்கு மிகவும் அழகாக கற்பித்த காலம் பற்றி அறிந்திருக்கின்றேன். தனது அரச சேவையில் மட்டுமன்றி குடும்ப வாழ்க்கையிலும் சரி தான் சார்ந்த மெடிஸ்த திருச்சபையிலும் சரி தனது பணியை முடிந்தவரை சரியாக செய்த ஒருவராக இவரை மதிக்கின்றேன்.

இப் பாடசாலை தனது 136வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த வேளையில் இவரின் சேவை ஓய்வு இப் பாடசாலைக்கு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்சத்தோன்றுகின்றது. இவரை இந்த நேரத்தில் மனதார பாராட்டி இவரது ஓய்வு காலம் இனிதே சிறப்பாக அமைவதற்கு இவரது குடும்பம் மேலும் உயர்வு பெறுவதற்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை வழங்குகின்றேன். அத்துடன் இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய துளிர் கழகத்திற்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**தி. ஜே. அதிசயராஜ்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
கல்முனை வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் 7 வருடங்கள் ஆசிரியர் சேவை காலத்தினையும் 16 வருடங்கள் பிரதி அதிபர் சேவை காலத்தினையும் 10 வருடங்கள் அதிபர் சேவை காலத்தினையும் பூர்த்தி செய்து பல ஆயிரம் மாணவர்களின் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து ஒளியேற்றிய ஒரு தீபச்சுடரான அதிபர் வ. பிரபாகரன் அவர்களின் அரச சேவைக்கால ஓய்வினை முன்னிட்டு வாழ்த்தி வழியனுப்பும் இவ் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு பெருமையடைகின்றேன்.

1959ம் ஆண்டு 9ம் மாதம் 15ந் திகதி திருக்கோவில் எனும் இடத்தில் வடிவேல் வின்னிபிரட், வேதமணி ஆகியோருக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்த இவர் முதலாம் ஆண்டு தனது ஆரம்ப கல்வியினை 1964 தொடக்கம் 1968 ஆண்டு வரை திருக்கோவில் அ.த.க பாடசாலையில் நிறைவு செய்திருந்தார் பின்னர் தரம் 6ம் ஆண்டு கல்வினை தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்தில் 1991 - 1992 ஆண்டு தொடக்கம் கற்றார். பின்னர் தனது உயர் கல்வியை மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்/ சிவானந்தா வித்தியாலய பாடசாலையில் நிறைவு செய்த பின் கிழக்கு பல்கலை கழகத்தில் 1984ம் ஆண்டு பட்டத்தினை நிறைவு செய்திருந்தார். பின்னர் தனது முதலாவது ஆசிரிய சேவையினை கமு/ அட்டாளைச்சேனை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் 1985ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

அதனைத் தொடர்ந்து1993 ஆம் ஆண்டு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் ஆசிரியராக கடமையேற்று தனது அர்ப்பணிப்பான ஆசிரியர் சேவையினை இப் பாடசாலைக்கு வழங்கியிருந்தார். அதனை தொடர்ந்து 1993ஆம் ஆண்டு உப அதிபராக கடமையேற்று தனது பொறுப்பினை செவ்வனே நிறைவு செய்தார் பின்னர் 2009 ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலை அதிபராக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

2011 ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவாகி பல தடவை கல்வி வலயங்களில் இருந்து பல பதவி உயர்வுகளுக்காக அழைத்த போதும் இப்பாடசாலையின் மீதும் இப்பிரதேச நலனிலும் ஆர்வம் கொண்ட பற்றின் காரணமாக அனைத்தையும் நிராகரித்து இறுதிவரை தன்னை இப்பாடசாலைக்காக அர்ப்பணித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சேவைக்காலப்பகுதியிலேயே இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கமானது மீழ் புத்துணர்ச்சி பெற்று இப்பாடசாலையில் பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றியதுடன் இப்பாடசாலையின் கல்வி கலாச்சார மற்றும் விளையாட்டுத் துறைகளில் பாரிய முன்னேற்றங்களை அடைந்தது இதில் குறிப்பாக பாடசாலை இரு வரவேற்பு வளைவுகள் மற்றும் SLT ரெலிகொம் அனுசரனையுடன் கடின பந்து Big Match, கண்காணிப்பு கமரா பொருத்தியது, மைதான வளவில் மரநடு திட்டங்கள், கண்காட்சிகள் என பல வேலைத் திட்டங்களை நிறைவு செய்து அத்துடன் இக்காலப்பகுதியில் பாடசாலைக்கும் இப் பிரதேச விளையாட்டுக் கழகங்கள், சமூகநல அமைப்புகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கிடையான ஒரு ஆரோக்கியமான சிறந்த நல்லுறவுவை கட்டியெழுப்பியதுடன் அதனூடாக இப்பாடசாலையும் சமூகமும் பரஸ்பர நன்மைகளை அடைந்து கொள்ள ஒரு சிறந்த அடித்தளத்தினை ஏற்படுத்திய பெருமை அதிபர் வ. பிரபாகரன் அவர்களையே சாரும்.

அத்தோடு இவரது சேவைக்காலப்பகுதியில் இவர் இப்பாடசாலைக்கான வளங்களை மேன்மைபடுத்துவதிலும் பாதுகாப்பதிலும் வினைத்திறனான வகையில் பயன்படுத்துவதிலும் முன்னின்று செயற்பட்டார் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறான ஒரு சிறந்த ஆளுமைமிக்க தலைவரை இப்பாடசாலை இழக்க நேரிட்டது துரதிஸ்டவசமானது. அரச உத்தியோகத்தர்கள் ஒய்வு அல்லது இடமாற்றங்கள் என்பது அரச சேவையில் தவிர்க்க முடியாத ஒன்று என்ற அடிப்படையில் எமது அதிபரின் இவ் ஓய்வினை நானும் எமது துளிர் கழகமும் மிகுந்த மனக் கவலையுடன் ஏற்றக்கொண்டு அவரது ஓய்வு காலத்தில் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இறைவன் நோய்நொடி அற்ற நீண்ட ஆயுளை வழங்க வேண்டும் என்று இறைவனை வேண்டியவனாக வாழ்த்தி வழியனுப்பி வைப்பதில் இப்பாடசாலையில் கல்வி கற்ற ஒரு மாணவானாக பெருமை அடைகின்றேன்

**பொ. பிரியதர்சன்**
(துளிர் கழகம்)
கணக்காளர் (இ.க.சே)
மட்/ நீர்பாசன திணைக்களம் - கி.மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ச்சிக்கு உரமூட்டிய உயர்ந்த மனிதன்.

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் வரலாற்றில் தடம் பதித்த அதிபர்களில் ஓர் தனி முத்திரை பதித்தவர் எமது பிரபாகரன் சேர். அத்துடன் எமது பாடசாலையில் கல்வி நிருவாகச்சேவை தரத்துடனுள்ள ஓர் அதிபராகவும் உள்ளார். தன் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களை முழுமையாகப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமாக்கிய பெருந்தகை.

1993 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலையை தன் வீடு போல் நேசித்தவர் மாணவர்களை தன் பிள்ளைகள் போன்று அன்புடன் பேணிவளர்த்தவர். இவரின் காலத்திலேயே பாடசாலையின் கட்டமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன புல கட்டடங்கள் உருவாகியிருந்தது. பாடசாலையின் மைதானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய அழகான விசேட தேவை மாணவர்களிற்கான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. முன்னாள் அதிபர் யோகம் வேலுப்பிள்ளை ஐயாவின் ஒத்த ஓர் நிருவாக அமைப்பு காணப்பட்டது. அவரின் அணுகுமுறைகள் சகலரையும் அரவணைத்து ஓர் சிறப்பான நிருவாகத்தைச் செயற்படுத்தும் வகையில் இருந்தது அதற்கு உதாரணமாக பெற்றோர் ஆசிரியர் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவற்றுடான சுமூகமான ஆக்கபபூர்வமான தொடர்பாடல் பாடசாலைக்கு வெளியில் விளையாட்டுக் கழகங்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களுடனான தொடர்புகள் மூலம் பாடசாலையின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான உதவிகளைப் பெற்று சரியான முறையில் அவற்றைப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் நிருவாகத்தை பொருத்தளவில் வேலைப்பங்கீட்டைச் சிறந்த முறையில் செயற்படுத்தயிருந்தார். அதன்மூலம் பிரதி அதிபர்கள், ஆசிரியர்களின் முழுமையான பங்களிப்பு பாடசாலைக்குக் கிடைக்கச் செய்தார்.

திரு. வ. பிரபாகரன் சேர் வலயக்கல்வி அலுவலகத்துடன் சிறந்த ஆக்கபூர்வமான உறவினைப் பேணிவந்தார். அத்துடன் வலயத்திலுள்ள சகல பாடசாலைகளுடனும் சிறந்த நட்புரீதியான உறவினைப் பேணிவந்தார். சகபாடசாலைகளின் நிகழ்வுகளிற்கான அழைப்புகளை நிராகரிக்காமல் தானே அந்நிகழ்வுகளுக்கு சமூகமளித்து அவர்களைக் கௌரவப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர்களைப் பொறுத்தளவில் அவர்களை கௌரவப்படுத்துவதில் அவர் என்றும் பின் நின்றதில்லை. அதன் மூலம் பழைய மாணவர்கள் பாடசாலையின் அபிவிருத்தியிலும், செயற்பாட்டிலும் பங்கு கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

பாடசாலையில் பயிலும் மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் அவர்களின் பெயர் சொல்லியழைக்கக் கூடிய நினைவாற்றலைக் கொண்டிருந்தார். அதன் மூலம் பெற்றோர் மாணவர்களுடன் ஓர் நட்புரீதியான சூழலிலேயே பாடசாலையை நிருவகித்தார்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பாடசாலையின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றிய அதிபர் பிரபாகரன் சேர் அவர்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 2019ம் ஆண்டு ஓய்வு பெறவுள்ளது பாடசாலைக்கு மட்டுமல்ல எமது கல்விச்சமூகத்திற்கே ஓர் இழப்பாகும். ஓர் கல்வி நிர்வாக சேவை உயர்நிலை தரத்திலுள்ள அவரின் ஓய்வு ஓர் சிறந்த அனுபவ முதிர்ச்சியுள்ள நிருவாகியை எமது சமூகம் இழக்கின்றது. ஆனாலும் பிரபாகரன் சேரின் ஆசிரிய சேவையின் பெரும் பகுதியை எமது பாடசாலையிலேயே சேவையாற்றியிருப்பதாலும் அவரின் துணைவியாரும் எமது பாடசாலையின் பழைய மாணவி என்பதுடன் இப்பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்றவராக இருப்பதாலும் அவர்களின் மகன் எமது பாடசாலையிலேயே கல்வி கற்று மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியிருப்பதாலும் அதிபரின் சேவை தொடர்ச்சியாக எமது பாடசாலைக்கு கிடைக்குமென பழைய மாணவர்களாகிய நாங்கள் மிகவும் உறுதியாக நம்புகின்றோம். அதிபரின் ஓய்வு நிலை வாழ்க்கை சிறப்பாக இருக்க பழைய மாணவர்களாகிய நாங்கள் மனமாற வாழ்த்துகின்றோம்.

செயலாளர்

**ந. ரமேஷ்**

(பழைய மாணவர் சங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு பெறும் ஓர் சாதனையாளன்

**திரு. வ. பிரபாகரன் அவர்கள்**

சுமார் 50 வருடங்கள் தொடர்ந்து பாடசாலையில் ஓர் மாணவனாக, ஓர் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக வாழ்ந்து முடித்த திரு. வ. பிரபாகரன் அவர்களை சாதனையாளன் என்று வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

மாணவன் செல்வன். வ. பிரபாகரன் தனது ஆரம்ப கல்வியை இப்போது குமாரவித்தியாலம் என்று அழைக்கப்டும் திருகோவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், பின்னர் தற்போது கலைமகள் வித்தியாலயம் எனப்படும் தம்பிலுவில் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், பின்னர் மேல்தர படிப்புகளுக்காக மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும் கல்வி பயின்றுள்ளார். பின்னர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்த உடனே ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளர். அன்று முதல் இன்று வரை தொடர்ந்து பாடசாலைகளிலேயே இவரது காலம் கழிந்துள்ளதை கணக்கிட்டுபார்த்ததல் மொத்தத்தில் இவரது கடந்த கால வாழ்வு பாடசாலைகளிலும் மாணவ, ஆசிரிய சமூகத்திலும், அவர்களுடன் ஒன்றாகி உறவாடி தனது சேவையை முழுமையாக அவர்களுக்காகவே அர்ப்பணித்துள்ளார் என்றால் மிகையாகாது.

இவற்றிற்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில் அவரது தகப்பன் திரு. வடிவேல் அவர்கள் ஓர் அதிபாவார். அவரது தாய் விண்னிபிரட் வேதமலை ஒரு ஆசிரியையாக இருந்திருப்பது திரு. பிரபாகரன் அவர்களின் வாழ்வில் ஒரு ஒளிமயமான காலம்தான்.

"கம்பன் வீட்டுதரியும் கவிபாடும்" எனும் வாசகத்திற்கேற்ப ஆசிரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த திரு. வ. பிரபாகரன் அவர்கள் ஆசிரியராக, அதிபராக சேவை புரிந்தது அவரின் குடும்ப பிண்ணனியென்றே நாம் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993ம் ஆண்டு உவெஸ்லி உயர்தர பாடசாலையில் ஆசிரியராக பணியேற்றார். அப்போது இருந்த அதிபர், ஆசிரியர்களுடன் மிகவும் பண்பாகவும் மரியாதையாகவும் பழகிவந்தார். மாணவர்களை நல் வழியில் வழிநடத்தி மாணவர்களினதும், பெற்றோர்களினதும் நன்மதிப்பை பெற்றவராக செயற்பட்டார்.

பிறந்த ஊர் திருக்கோயிலாக இருந்த போதும் தனது மணவாழக்கையை கல்முனையிலேயே ஆரம்பித்தார். அவரது மனைவியும் ஆசிரியராக மட்டுமின்றி அவருக்கேற்ற நல்ல துணைவியாகவும்,அவரோடு ஒன்று பட்டு இல்லற வாழ்வில் மட்டுமின்றி பாடசாலை வாழ்நாளிலும் அவருடன் 2009ம் ஆண்டு வரை பணிபுரிந்தமை திரு. பிரபாகரன் அவர்களுக்கு மேலும் ஓர் பலமாகவே இருந்திருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

2009ம் ஆண்டில் திரு. பிரபாகரன் அவர்கள் உவெஸ்லி பாடசாலையின் அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்று அப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிதும் உழைத்தார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கத்தில் பெரும் சாதனையை ஏற்படுத்தி 1000 பெற்றோர்களைக் கொண்ட ஒரு பெற்றார் ஆசிரிய சங்கத்தை ஏற்படுத்தி மாணவர்களின் படிப்பிலும் அவர்களின் ஒழுக்கம் போன்றவற்றை அதனூடாக கண்காணித்து சூழல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பாடசாலையின் நிர்வாகக்கட்டமைப்பில் இறுக்கமான தேவை ஏற்படின் இறுக்கமான தன்மையைக் கைக்கொண்டு பாடசாலையை நன்கு நிருவாகம் செய்த ஓர் சிறந்த அதிபராக விளங்கினார்.

பொதுவாக வசதியற்ற ஏழை எளிய மாணவர்களைக் கருத்திற் கொண்டு அவர்களின் கல்வி மேம்பட பல நல்ல செயற்பாடுகளில் ஈடுபட்டார். எனக்குத் தெரிந்த வகையில் ஓர் வசதியற்ற மாணவி ஒருவருக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றும் வரையில் அவருக்கான பிரத்தியேக வகுப்புகளுக்கான செலவுகளை திரு.வ. பிரபாகரன் அவர்கள் தன்னுடன் மட்டகளப்பு வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில் கற்று பட்டம் பெற்று தற்போது கனடாவில் வசிக்கும் தனது நண்பி மூலமாக ஒரு கணிசமான தொகையைப் பெற்று அந்த மாணவிக்கான கல்விச் செலவுகளுக்காக கொடுத்து வந்ததை நான் கண்ணூடாக கண்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் சமூகசேவைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தபோதும் எமது துளிர் கழகம் ஒரு காலத்தில் விளையாடுவதற்கு ஓர் மைதானம் இல்லாமல் அலைந்த வேளையில் தனது கல்லூரிக்குச் சொந்தமான உவெஸ்லி விளையாட்டு மைதானத்தில் எங்கள் கழக உறுப்பினர்களை விளையாட அனுமதித்தார் அது மட்டு மன்றி எமது துளிர் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் எம்மோடு கைகோர்த்து நின்ற பெருமகன். அதேபோன்று எமது கழகமும் அவரை மிகவும் நன்றியுடன் பார்த்ததுடன் அவரின் தேவைகளை பாடசாலை அபிவிருத்தி, தளபாடங்கள் மற்றும் மைதானத்தை துப்பரவு செய்தல் போன்ற சேவைகளை அவரின் ஆலோசனைக்கும் திருப்திக்குரிய வகையிலும் நிறைவேற்றியுளது.

மேலும் திரு வ. பிரபாகரன் அவர்கள் தனது கிறிஸ்தவ சமயத்தின் மேலுள்ள அதீக பற்றும், நம்பிக்கையும் காரணமாகவும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பலர் மெதடிஸ்த திருச்சபையில் ஊழியர்களாகவும், பிரசங்கிகளாகவும், போதகர்களாகவும் விளங்கிய காரணத்திலும் அவரும் அத்திருச்சபையில் ஓர் நிர்வாக அங்கத்துவம் பெற்று சபையின் உப தலைவராகி அதன் மூலம் இலங்கையின் தென்மாகாணம், மத்திய மாகாணங்களில் நடைபெற்ற ஆராதனைக் கூட்டங்களில் கலந்து சேவையாற்றும் தகுதியையும் பெற்றுக் கொண்டது இறைவன் அவருக்கு வழங்கிய அருள் கடாட்சமாகும். பாடசாலையின் அருகாமையில் உள்ள இல்லம், கிறிஸ்தவ சிறுமியர் இல்லம் என்பவற்றை கவனம் செலுத்தி அவர்களின் பங்களிப்புடன் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா போன்ற நிகழ்வுகளை மிகவும் நேர்த்தியாக நடைபெற வழிசமைத்தார்.

இவ்வாறு சமூகப்பணிகள், சமயபணிகள் எனப் பல வகையிலும் தன்னை ஈடுபடுத்திய திரு. பிரபாகரன் அவர்கள் 7 வருடங்கள் ஆசிரியராகவும், 16 வருடங்கள் பிரதி அதிபராகவும், 10 வருடங்கள் அதிபராகவும் பணிபுரிந்ததுமட்டுமன்றி இலங்கை அதிபர் சேவை, கல்வி நிர்வாகசேவை போன்ற பரீட்சைகளிலும் சித்தியெய்து பல சாதனைகளை படைத்த திரு. பிரபாகரன் அவர்களின் பெயரைக் கேட்டாலே ஓர் பெரும் சாதனையாளன் என்ற உணர்வு எம்முள் ஓங்கி நிற்பதை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஓர் சாதனையாளன், நிருவாகி, பண்புள்ள ஆசிரிய தோழன், அன்புள்ள ஆசான் தனது 50 வருடகால பாடசாலை சமூக அனுபவங்களையும் ஏறத்தாழ 35 வருட ஆசிரிய, பிரதி அதிபர், அதிபர் எனும் சேவைகளில் தன்னை அர்ப்பணித்து இன்று தனது 60 அகவையை பூர்த்தி செய்த ஓர் பூரண சாதனையாளன் தனது சேவையிலிருந்து இளைப்பாறுதல் பெற்றுச் செல்வது எமது துளிர் கழகத்திற்கும், உவெஸ்லி பாடசாலை சமூகத்திற்கும் ஓர் பெரும் இழப்பாக இருந்தாலும் அவரது பொதுப்பணி எம்மையும், இப்பாடலையையும் என்றும் தொடரவேண்டும். அதற்கு எல்லாம் வல்ல அந்த இறைவன் அவருக்கு நல்ல நலத்தையும் கொடுத்து ஆசீர்வதிக்கவேண்டும் எனவும் வேண்டுவதுடன் அவர் என்றும் நலமுடன் தனது குடும்பத்துடன் இந்த இளைப்பாறும் காலத்தில் சாந்தி சமாதானத்துடன் நீண்ட காலம் வாழ வேண்டி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

இவ்வண்ணம்:

**பொன். கணேசமூர்த்தி**

(ஆலோசகர் - துளிர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பத்து மூன்றிலும் முடிவுறாத சேவை நாயகன்

முப்பத்து மூன்று வருடங்களிலும் முடிவுராத சேவை நாயகன் திருமதி. வடிவேல் வேத மலையின் உதித்த முடி சூடா மன்னனான பெயரோடு பிடிப்பாயிருந்த பிரபாகரன் ஐயா! திரு. வெங்கடாசலம், திரு. முருகையா, தம்பி என்று செல்லமாக அழைத்த எங்கள் பிரபாகரன் அதிபர் விட்டுச் செல்லும் தடங்களை ஞபகப்படுத்த முனைக்கின்றேன். இவரின் மனிதாபிமானத்தையும் கொள்கையில்மாறாத பிடிப்பினையும் சீர்திருந்த சிந்தனையும் நாடக ஆசிரியராகவும், நடிகராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருந்திருக்கின்றார் என்பதனை சொல்ல நினைக்கிறேன்.

இவரின் ஆரம்ப கல்வி நிலையில் திருக்கோயில் குமார வித்தியாலயத்திலும், தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயத்திலும், கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை, வந்தாருமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திலும் கல்விக்கான காலத்தை கழித்தார், கழிந்த காலத்தை சேர்பதற்காக ஆசிரிய பணியில் சேர்ந்து கொண்டார். அட்டாளச்சேனை முஸ்லிம் வித்தியாலயத்திலும், தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திலும், கல்முனை உவெஸ்லி உயர்தர படசாலையிலும் தனது சேவையை ஆற்றி இருக்கின்றார். இதில் 33 வருடங்களின் நினைவினை 2019 - 09 - 15 இல் கொண்டாடுகின்றோம். இவர் அதிபராகவும், கல்வி நிர்வாக சேவையின் மூத்த அதிபராகவும் இருந்து கல்விப்பணியாற்றி இருப்பது நினைவேற்றிக் குறிக்க வேண்டிய விடயமாகும்.

உவெஸ்லி உயர்தர பாடசாலையின் ஆசிரியகவும், பிரதி அதிபராகவும், அதிபராகவும் இருந்த காலங்களில் துளிர் விளையாட்டு கழகத்தின் உயர்ச்சிக்காக அவரது பூரண ஒத்துழைப்பினையும் ஒத்தாசையும் வழங்கி துளிரின் வளர்ச்சிக்கு உரமூட்டியவராவார். இவரின் சேவையை நன்றியோடு பார்க்கின்றோம். உவெஸ்லி மைதானத்தினை பயன்படுத்துவதற்கு முழு அதிகாரத்தையும் வழங்கி உதவிபுரிகின்ற தன்மையை அதனுடாக கண்டு கொண்டோம்.

2004 சுனாமியின் பின் உவெஸ்லி மைதானம் இடைத்தங்கல் முகாமாக இருந்து விடுபடுவதற்கும் அதனை சீர் திருத்தி செப்பனிடுவதற்கும் அதிபர் திரு.முருகையா அவர்களின் தலைமையில் அவரோடு ஒத்தாசையாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர் கழகத்தின் அயராத முயற்சியால் மைதானம் புத்துயிர் பெற்றது. ஒவ்வொரு இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் போட்டிகளை நடத்துவதற்கு துளிரின் ஒத்துழைப்பினை வழங்குவதற்கு அனுமதி வழங்கி கண்ணியப் படுத்தியிருக்கின்ற அதிபர் பிரபாகரன் ஐயா அவர்கள் தான்

மனிதாபிமானத்தின் வித்து உங்கள் உணர்வில் நடப்பட்டிருக்கின்றது. அதற்கு உதாரணமாக உங்களுடைய காலத்தில் சிக்கனக் கடன் சங்கமொன்றை ஆரம்பித்து அதனூடாக பல நன்மைகள் செய்து இருக்கின்றீர்கள் பொருளாதாரத்தில் இடர்படுகின்ற ஆசிரிய நண்பர்களுக்கு இலகு கடன்களின் மூலம் சீர் செய்த பெருமை உங்களைச் சார்ந்தது. தேவை அறிந்து கேட்காமல் பல பேருக்கு பண உதவிகள் உங்கள் காலத்தில் வழங்கி இருக்கின்றீர்கள் அவற்றை நினைத்துப் பார்த்து பெருமைப்பட்டு இருக்கின்றோம்.

கொள்கைவாதிகளை நிறையப் பார்த்திருக்கின்றேன் அதில் நீங்கள் முற்றிலும் மாறுபட்டவர். தனது தேவைக்காக மறந்து, மாறி, வாழ்ந்து இருக்கின்றார்கள் ஆனால் நீங்கள் எச்சந்தர்பத்திலும் பிடித்த கொள்கை மாறாமல் வாழ்ந்த ஒருவர். சமயத்தில் உறுதியான கொள்கை கொண்டவர் பாடசாலை நிர்வாகத்தில் ஆசிரியர்களுடான ஈடுபாடு குறிப்பாக துளிர் கழகத்தினுடாக கொள்கை, பழையமாணவர்களுடான கொள்கைகள் எந்தவிதத்திலும் மாறாமல் அனைவரையும் தனது கொள்கை நிலைப்பாட்டில் ஒழுங்கு படுத்தியவர் என்றால் மிகையாகாது.

அதிபர் அவர்களின் தூரநோக்குச் சிந்தனையும் மாணவர்களை சீர் திருத்தச் சிந்தனையும் மாணவர்களிடையே ஏற்படுத்துவதற்கு மிகவும் முனைப்பாக இருந்தார் அதனை பாடசாலையின் கடமைக் காலத்தில் அறியக் கூடியதாக இருந்தது. திசை மாறிப்போன மாணவர்களை சிறந்த மேடை நாடகங்களை எழுதி நடித்து மாணவர்களின் மனங்களில் இடம் பிடித்தார் "தம்பி வரட்டும்" என்ற நாடகத்தில் நடித்த திரு. நவசிவாயம் சேர், திருமதி. நிர்மலா, திரு. கருணாகரன், திரு. ஜனக்கா, திரு. சாந்தகுமார், திரு. கருணாநிதி, அதிபர் திரு. முருகையா அவர்களையும் மறந்து விடமுடியாது. மாணவர்களிடம் கானப்பட்ட குறைகளைக் களைவதற்கு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் நகைச்சுவையாக கேலி செய்வதனூடாக பல மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் ஏற்படுத்திய ஒருவர் என்று கூறுவது சாலப் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஆசிரியராக 1993களில் உ/வெஸ்லி உயர்தர பாடசாலைக்கு கடமையின் நிமித்தம் வந்தவேளை அவருடன் இணைந்து ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் இவரிடத்தில் நான் கண்ட மிகவும் சிறப்பான தன்மைகள் பிள்ளைகளின் பெயர்களையும், பெற்றோர்களின் பெயர்களையும் ஞாபகத்தில் வைத்திருநது அவர்களின் காரியங்களை முன் வைத்து கடமையாற்றக்கூடிய ஆளுமையும் அறிவும் கொண்டவர்.

அவரின் ஞாபகத் திறனை கண்டு வியந்த ஒரு சம்பவத்தை இவ்விடத்தில் எடுத்துக் காட்டாகச் சொல்லலாம் என நினைக்கின்றேன் மாகாணமட்ட குழுப்பரிசோதனையின் போது ஆசிரியர்களின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது அதில் கூறப்பட்ட விடயங்களை எழுதாமல் அப்படியே ஞாபகத்தில் வைத்து நடைபெற்ற விடயங்களை எழுதி வாசித்துக் காட்டியது போல் வாசித்துக் காட்டிய திறமையும், ஞாபகமும் அவரிடத்தில் இருந்ததனை அன்று என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இதுபோன்று இன்னொரு நல்ல விடயத்தினைக் கூற வேண்டும். பாடசாலை ஆசிரியர் அனைவரையும் ஒரு குடும்பம் போல் நினைப்பதும் அதனைச் செய்வதுமான தன்மை இவரிடம் உண்டு. ஒரு மரணவீடு என்றால் முதல் நின்று அனுதாபம் தெரிவிப்பதில் அவரும் ஒருவர். தொடர்ந்து நோக்குகின்ற போது அவருடைய சேவை முப்பத்தி மூன்றோடு முடிவுறாது அவருடன் அவரின் சேவைகள் தொடர்ந்து வரும். முடிவுறாத சேவை நாயகனாக இச் சமூகத்தின் உயவிற்காக சேர்ந்து பயணிப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

உங்களோடு பயணிக்க இருக்கும்

**கா. சாந்தகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுபட்ட இடங்கள்

திங்கட்கிழமை வாரத்தில் முதல் நாள் தொலைவில் வைத்தே அனுமானிக்க கூடிய ஒலிப்புடன் ஒரு பைக் வந்து கொண்டிருக்கும் அசைவை கண்டால் நேரத்தை சரியாக சொல்லலாம் காலை 7. மணி 10 நிமிடம் என, கறுப்பு நிற Trouser உடன் வெள்ளை நிற Shirt முக ஒப்பனையில் அந்த குறுந்தாடி மட்டும் தனிமையாக தெரிய பாடசாலை சந்தை வழியாக நுழைவார். அவரின் வருகை காலை ஒன்று கூடலுக்கான மணி அடிக்கும் முன்னே அனைத்து மாணவர்களையும் சரியாக 07.25க்கு சொர்ணம் அரங்கின் முன் நிற்க வைத்து விடும்.

திங்கட்கிழமை பாடசாலை கீதம் மட்டும் தான் பயிற்சி இல்லை எனும் திருப்தி மனதில் நின்றாலும் மேடையில் பிரசனன்மாகி இருப்பவர் அவராச்சே எனும் எண்ணம், பட படப்பு மனதில் ஓடிக் கொண்டே இருக்கும். நம் கை, கால் வேற சும்மா இருக்காது யாரையும் சுரண்டிட்டு இருக்கும். ஆனாலும் “கம்முன்னு” இருந்திடனும் இல்லன்னா Stage இல் ஏற்றி வைத்து மானத்தை வாங்கிவடுவார். என்று நினைத்திருக்கும் போது மைக் அலற ஆரம்பிக்கும் பாடகர் ஹரிகரனின் குரல் போல் ஒவ்வொரு சொல்லும் காதில் “டிங், டிங்” என்று விழும். ஒவ்வொரு பேச்சிலும் உவமையுடன் சொல்லி முடிக்கும் பேச்சு திறமை அவருடனேயே பிறந்ததாக கூட இருக்கலாம்.

தான் பேசும் போது யாராவது தங்களுக்கு இடையில் பேசிக் கொண்டோ, சுரண்டிக் கொண்டோ இருந்ததைக் கண்டார் எனில் பெயர் எல்லாம் சொல்லி அழைக்கும் பழக்கமில்லை. கண்களைப் பார்த்ததே சுண்டு விரல் அழைக்கும். குற்றம் செய்வதன் ஏதோ துக்கு மேடையினை நோக்கிச் செல்வதைப்போல் அரங்கின்மேல் செல்வான். அங்கே அவ் மாணவன் வரலாறை அனைவருக்கும் முன் ஒப்புவிப்பார். இவ்வாறான தண்டனைகள் பிரம்படிகளைவிட வழிமையானது. இவ்வாறான தண்டனைகள் அவ்மாணவனுக்கானது மட்டுமல்ல அவ்அரங்கில் கூடியிருக்கம் 2000 மாணவர்களுக்கும் சேர்த்தே!

ஒரு தவறை செய்தாலோ அல்லது தவறுக்கான சாட்டியாக யாரையும் அனுமானித்து கேள்வி கேட்டால் அவனோ, அவளோ பொய் சொல்லித் தப்பிடனும் என்று நினைத்தாலோ அவர்களுக்கு ஒன்று சொல்லவார் “தப்பு செய்த மாடு ஒன்றை நீண்ட கயிற்றில் கட்டி மேய விடுவேன் அந்த மாடோ இவன் முட்டாள் என்னையும் நம்பி விட்டு விட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என புற்களையும் மேய்ந்து விட்டு தப்புவதற்கு தயாராக ஓடும். ஒரு நாள் அந்த கயிற்றின் நீள முடிவுவரை ஓடிய பின் அதன் கழுத்தை அந்த கயிறு பற்றிப்பிடிக்கும். மீண்டும் அதை கட்டியவனிடம் தான் வரும் அந்த மாடு அதுபோல் தான் நீ இப்போது என்னிடம் இருந்து செல்கிறாய் "செல்" என கழுத்துத் தாடைகள் குறுக குறுக சிரித்து விட்டுச் செல்லுவார் "உண்மைகளை நீ மறைக்கலாம் ஆனால் ஒழிக்கமுடியாது எனும் அந்த வாழ்க்கைத் தத்துவம் புரிவதற்கு எனக்கு பத்து வருடங்கள் ஆயிற்று.

மாற்றுத் திறனாளிகளுடன் இவருக்கு எப்போதும் நெருக்கமான உறவு உண்டு Care நிறுவனம் அப்போது பால், பனிஸ், சாப்பாட்டுடன் கால்ராக்ஸ் எனும் பிஸ்கட் கொடுப்பார்கள் அந்த பிஸ்கட் சாப்பிட பாடமெல்லாம் கட்பண்ணி போய் நிற்போம், அந்த பிஸ்கட்டும் சரி மதிய உணவும் சரி அதை உண்ட எந்த மாணவரும் மறக்கமாட்டோம். அவரும் மறந்திருக்க மாட்டார் அவரின் நெற்றியின் நடுவே ஒரு தடம் இருக்கும் இதைவாசித்தபின் மீண்டும் ஒருமுறை அவரின் நெற்றியினை பாருங்கள் சரஸ்வதி பூசையின் இறுதிநாளில் கும்பம் கலைக்க கடலுக்கு செல்ல வீதியோரத்தில் நின்ற போது கம்பி கிழித்த தடம், அந்த தடம் போலவே என்றும் அழியாதது அவரின் தடங்களும் உவெஸ்லி பாடசாலையின் உறவும். உயரவளர்ந்திருக்கும் ஆலவிருட்சங்கள் மட்டுமல்ல அதிபர் திரு. வ. பிரபாகரன் எனும் ஆளுமையும் அந்த பெயரின் வீரியமும் ஒவ்வொரு மாணவனின் உயிர்போற்றும் கூற்றாக இவ்வனைத்தும் தொடருமே என்றென்றும் விடுபட்ட இடங்களாக


இவன்

R. **புஸ்பகாந்தன்** (BBA)

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின்

பழைய மாணவன் எனும் பெருமைக்குரியவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடூழி வாழ்க

எங்கள் பாடசாலை தலைவரே
எங்கள் இனிய அதிபரே
சொன்னீர்கள் பல கேள்விக்கு விடை
இப்போது உங்களின் பிரயா விடை
அன்பிற்குச் சொந்தக்காரர் நீங்கள்
இதற்கு கைமாறு என்ன செய்வோம்

எப்போதும் உயர்வானது உங்கள் பண்பு
எங்களை எழவைத்தது உங்கள் அன்பு
எங்கள் பாடசாலையின் அன்பு சுடரே
உங்களால் இருந்ததில்லை இடரே

சிறப்பாக உள்ளார்கள் உங்கள் படிப்பால்
எங்களைத் திருத்தினீர் உங்கள் கண்டிப்பால்
இவ்வளவு காலமும் எங்கள் பாடசாலை
அடித்தளமாக இருந்தீர்கள்
இதற்கு நன்றி சொல்ல வார்த்தை எங்கு

நீங்கள் நீடூழி காலம் வாழ
எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**V. சதுசன்**
(துளிர் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால நிகழ்வுகளின் விஷேட அரையாண்டுத் தொகுப்பு 2019
## சர்வதேச சுட்டிகளும் இலங்கையின் நிலையும்

| இல | சர்வதேசசுட்டி | ஆண்டு | இலங்கையின் இடம் | முதலாவது நாடு | இறுதிநாடு |
|---|---|---|---|---|---|
| 01 | உலககொடுக்கும் சுட்டெண் | 2018 | 27 | இந்தோனேசியா | ஏமன் |
| 02 | உலக சமாதானச் சுட்டி | 2019 | 72 | ஐஸ்லாந்து | ஆப்கானிஸ்தான் |
| 03 | உலகலாவியசட்ட விதிக்கானசுட்டி | 2017 2018 | 59 | | |
| 04 | ஊடகச் சுதந்திரசுட்டி | 2018 | 131 | நோர்வே | தூக்மெனிஸ்தான் |
| 05 | உலகலாவியகாலநிலைஅபாயச் சுட்டி (அதிகம் பாதிக்கப்பட்ட 10 நாடுகளின் பட்டியலில்) | 2019 | 02 | புவேர்ட் டோரிக்கோ | தாய்லாந்து |
| 06 | மனித அபிவிருத்திசுட்டி | 2017 | 76 | | |
| 07 | ஊலகின் பாதுகாப்பானநாடுகளின் பட்டியல் | 2019 | 70 | ஐஸ்லாந்து | பிலிப்பைன்ஸ் |
| 08 | ஊலகளாவிய மகிழ்ச்சி அறிக்கை | 2019 | 130 | பின்லாந்து | தென்சூடான் |
| 09 | ஊழல் உணர்வுகள் சுட்டி | 2018 | 38 | | |
| 10 | Logistics Performance index | 2018 | 94 | ஜேர்மனி | ஆப்கானிஸ்தான் |
| 11 | Global passport power Rank | 2019 | 85 | United Arab Emirates | ஆப்கானிஸ்தான் |
| 12 | Military Strength Ranking (Global Fire Power) | 2019 | 90 | அமெரிக்கா | பூட்டான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமகாலநிகழ்வுகளின் விஷேட அரையாண்டுத் தொகுப்பு 2019
## மத்திய வங்கி ஆண்டறிக்கைத் தரவுகளின் தொகுப்பு

| தரவு விபரம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| பொருளாதாரவளர்ச்சி | 5.0 | 4.5 | 3.4 | 3.2 |
| குடித்தொகை | 20.966M | 21.203M | 21.444M | 21.67M |
| மாணவர் ஆசிரியர் விகிதம் (பொதுக் கல்வி) | 17.0 | 18.0 | 18.0 | 17.0 |
| மாணவர் ஆசிரியர் விகிதம் (பல்கலைக்கழகம்) | 17.0 | 17.5 | 17.5 | 18.4 |
| கல்விமீதானஅரசசெலவீனம் (மொ. உ. உ இன் சதவீதமாக) | 2.0 | 2.0 | 2.0 | 1.9 |
| சுகாதாரம் மீதானஅரசின் செலவினம் (மொ.உ.உ இன்சதவீதமாக) | 1.6 | 1.6 | 1.6 | 1.5 |
| பாதுகாப்பானகுடிநீரைப் பெறுவோர் வீதம் | 89.7 | 89.7 | 89.7 | 90.6 |
| குழாய் நீரைப் பெறுவோர் வீதம் | 45.9 | 47.7 | 47.7 | 50.5 |
| தங்கியிருப்போர்வீதம் | 49.4 | 49.4 | 49.4 | 49.4 |
| குடித்தொகைஅடர்த்தி (சதுரகிலோமீற்றருக்கு) | 334 | 338 | 338 | 346 |
| இணையஅடர்த்தி (1000 ஆட்களுக்கு) | 19.5 | 23.2 | 23.2 | 33.5 |
| ஆண்டுமழைவீழ்ச்சி (மி.மீ) | 2,131 | 1,351 | 1,351 | 1.944 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமகாலநிகழ்வுகளின் விஷேட அரையாண்டுத் தொகுப்பு 2019

## சர்வதேச மாநாடுகள் பற்றியதொகுப்பு

| இல | சர்வதேச மாநாடு | காலப்பகுதி | விபரம் |
|---|---|---|---|
| 01 | ஐக்கிய நாடுகளின் பசுபிக் வலயசுற்றாடல் துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் துறைசார்ந்த நிறுவன தலைவர்கள் மாநாடு | ஜனவரி 2019 | இது சிங்கப்பூரில் "சுற்றாடல் சவால்கள் பேண் தகுபயன்பாடுமற்றும் உற்பத்திக்கானசெயல்திறன் மிக்கதீர்வுகள்"என்றதொனிப் பொருளில் இடம்பெற்றதோடு இதில் ஆசியபசுபிக் பிராந்தியத்தின் 40 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். |
| 02 | கடல் உயிரினங்களை வேகமாக அபிவிருத்தி செய்வது பற்றியபிராந்தியமாநாடு | பங்குனி 2019 | இது கொழும்பு கில்டன் கொட்டலில் இட்ம் பெற்றது இதில் தெற்காசிய பிராந்தியத்திற்கான கடலுணவு அபிவிருத்தி வேலைத்திட்டம் பற்றி ஆராயப்பட்டது இதனை இலங்கை கடல்வாழ் உயிரின அபிவிருத்தி அதிகாரசபையும் சார்க் விவசாய அமைப்பும் கூட்டாக ஏற்பாடுசெய்தன. |
| 03 | உலகபொருளாதாரமாநாடு | ஜனவரி 2019 | இது டாவோஸ் -சுவிஸ்லாந்தில் இடம்பெற்றது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் பயண்படுத்தப்படும் 04 இலக்கதொலைபேசி சேவை இலக்கங்கள்

| இல | தொலைபேசி இல | நோக்கம் |
|---|---|---|
| 01 | 1900 | தொலைத் தொடர்புத் துறைதொடர்பான விடயங்களை தெரிவிப்பதற்கு |
| 02 | 1901 | மின்சார சேவை தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு |
| 03 | 1902 | பொதுமக்கள் தொடர்பு—உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| 04 | 1905 | Hot Line Of Investigation & Monitoring Unit |
| 05 | 1908 | ஜனாதிபதிசெயலகம் |
| 06 | 1909 | IMEIசரிபார்ப்புஅமைப்பு |
| 07 | 1910 | மின்சார இடைநிறுத்தம் தொடர்பானமுறைப்பாடுகளுக்கு(LECO Areas) |
| 08 | 1911 | பரீட்சைகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கும் மற்றும் தகவல்களுக்கும் |
| 09 | 1915 | பொதுமக்களிடமிருந்தானமுறைப்பாடுகளுக்கு—தொல்பொருள் திணைக்களம் |
| 10 | 1916 | வாடிக்கையாளர் சேவை—Strategic Enterprise ManaGement Agency |
| 11 | 1917 | வாடிக்கையாளர் சேவை—மேல் மகாணமற்றும் மகநகரஅபிவிருத்திஅமைச்சு |
| 12 | 1918 | விவசாயிகளுக்கானசேவைவழங்க்ல் - விவசாயஅமைச்சு |
| 13 | 1919 | அரசாங்கத் தகவல் நிலையம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச மாநாடுகள் பற்றியதொகுப்பு

| இல | சர்வதேச மாநாடு | காலப்பகுதி | விபரம் |
|---|---|---|---|
| 01 | ஐக்கிய நாடுகளின் பசுபிக் வலயசுற்றாடல் துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் துறைசார்ந்த நிறுவன தலைவர்கள் மாநாடு | ஜனவரி 2019 | இது சிங்கப்பூரில் "சுற்றாடல் சவால்கள் பேண் தகுபயன்பாடுமற்றும் உற்பத்திக்கானசெயல்திறன் மிக்கதீர்வுகள்" என்றதொனிப் பொருளில் இடம்பெற்றதோடு இதில் ஆசியபசுபிக் பிராந்தியத்தின் 40 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். |
| 02 | கடல் உயிரினங்களை வேகமாக அபிவிருத்தி செய்வது பற்றியபிராந்தியமாநாடு | பங்குனி 2019 | இது கொழும்பு கில்டன் கொட்டலில் இட்ம் பெற்றது இதில் தெற்காசிய பிராந்தியத்திற்கான கடலுணவு அபிவிருத்தி வேலைத்திட்டம் பற்றி ஆராயப்பட்டது இதனை இலங்கை கடல்வாழ் உயிரின அபிவிருத்தி அதிகாரசபையும் சார்க் விவசாய அமைப்பும் கூட்டாக ஏற்பாடுசெய்தன. |
| 03 | உலகபொருளாதாரமாநாடு | ஜனவரி 2019 | இது டாவோஸ் -சுவிஸ்லாந்தில் இடம்பெற்றது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

நாளை மண்ணில் பூ பூக்கும்
அதற்கு இந்த மழையும் பூமியும் சாட்சி!
நாளை பகலும் இரவும் வரும்
அதற்கு வானமும் பூமியும் சாட்சி!
நாளை மாற்றம் வரும் என்பதற்காக
இந்த உலக மனிதர்கள் சாட்சி!
நாளை உன் வாழ்க்கையில் வெற்றி வரும்
அதற்கு உன் உழைப்பும் முயற்சியும் சாட்சி!

முயற்சி என்பது விதை போல
அதை விதைத்துக் கொண்டே இரு!
முளைத்தால் அது மரம்
இல்லை என்றால் அது
மண்ணிற்கு உரம்!

சிரிப்பு இல்லாத வாழ்க்கை
சிறகு இல்லாத பறவை போல் . . . . !
முயற்சி இல்லாத மனிதன்
உயிரில்லாத உயிரினம் போல . . . . !

துளிர் கழகம்
"ஒன்றுமையே எங்கள் முதல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இம் மலராக்கத்திற்கு உதவியவர்களுக்கும்,

ஒப்புநோக்கியவர்களுக்கும்,

விழாவில் கலந்து சிறப்பித்த அதிதிகள்,

அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள்,

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,

மாணவர்கள், பிரமுகர்கள், மற்றும் எமது

துளிர் கழக அனுசரணையாளர்களுக்கும்

மனமார்ந்த நன்றிகளைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.


| | |
|---|---|
| சஞ்சிகை | ஓயும் உயரம் |
| வெளியீடு | துளிர் கழகம், கல்முனை. |
| பதிப்பு | செப்டம்பர் 2019 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிர் கழக வளர்ச்சியில் அக்கறை செலுத்தும் அனுசரணையாளர்கள்

சரவணாஸ் ஜுவலரி
ஜி. கே. சினிமெக்ஸ்
MRC
அன்பு ஸ்டோர்ஸ்
பாபுஜீஸ்
ஹிமா Sport Complex
Well Pharmacy
Mega Mart
மனால் ஜுவல்ரி
Jeya Hotel
Ranga Lanka (Hair Pirashath)
Singer Show Room Akp (Mohan)
Nimalan Stores
Duniya Sweet Center
Losanth Family
Abishek Family
NRS
SLR
Singer Show Room Valaichenai (Rohan)

Baby and Mammy
Unicorn Book Shop
Kisha Film Makers
Bala Jewellers
Galaxy Phone Shop
Jeevan Textiles
Piriyageeth - A/L
Thiyahu (Celinco Manager)
Shiva Store (Kumar)
K. Sivaranjith (Attorney -At-Law)
Jayakanthan (Elephant house)
JK Stores
People Salvation Forum (Ganesh)
Anitha Jewellery
Banda Sweet Centre
Sathuska Constraction
Thuraiyappa Family
Hamiltan Sticker Shop
Shivanantham Family (Prana)

விக்டரி அச்சகம், கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org